செ.வெ.எண்: 707 நாள்: 01.11.2020

**மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்களின் உடல் அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது**

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், ராஜகிரியில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்களின் உடல் அரசு மரியாதையுடன் இன்று(01.11.2020) நல்லடக்கம் செய்யப்பட்டது.

கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி நேற்றிரவு சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் காலமான மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்களின் உடல் அவரது சொந்த ஊரான தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், ராஜகிரி கிராமத்திற்கு இன்று(01.11.2020) பிற்பகல் ஆம்புலென்ஸ் மூலம் கொண்டு வரப்பட்டது.

ராஜகிரி கிராமத்திலுள்ள அவரது வீட்டின் வாசலில் அவரது குடும்பத்தினா் மற்றும் உறவினர்கள் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்திய பின்னா், வீட்டின் அருகிலுள்ள அய்யனார் கோவில் திடலில் பொதுமக்கள் அஞ்சலிக்காக மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்களின் உடல் வைக்கப்பட்டது. சுகாதார துறையினர் அவரது உடலை ஆம்புலென்ஸ் வாகனத்திலிருந்து சிகப்பு கம்பளம் விரிக்கப்பட்ட மேடையில் வைத்தனர். பின்னர், போலீசாரால் முழு அரசு மரியாதையுடன் எடுத்து வரப்பட்ட தேசிய கொடியை சுகாதார துறையினர் மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்களின் உடலின் மீது போற்றினர்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்களின் உடலுக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த அவரது திருஉருவபடத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சா் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவா்கள் மலா்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். தொடா்ந்து, மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சா் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவா்கள், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீா்வைத்துறை அமைச்சா் திரு.பி.தங்கமணி அவா்கள், மாண்புமிகு நகராட்சி நிா்வாகம், ஊரக வளா்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சா் திரு.எஸ்.பி. வேலுமணி அவா்கள், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சா் திரு.சி.வி.சண்முகம் அவா்கள்,

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.ஆர்.காமராஜ் அவர்கள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.உடுமலை கே ராதாகிருஷ்ணன் அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என்.நடராஜன் அவர்கள், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்கள், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி.எஸ்.வளர்மதி அவர்கள், அரசு தலைமை கொறடா திரு.தாமரை எஸ்.இராஜேந்திரன் அவர்கள், மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர் திரு.ஆர்.வைத்திலிங்கம் அவர்கள், தேனி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஓ.பி.எஸ்.இரவீந்திரநாத் குமார் அவர்கள், பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.வி.சேகர் அவர்கள், திருச்சி மத்திய மண்டல காவல்துறை தலைவர் திரு.ஜெயராம் இகாப., வேளாண்மைத்துறை இயக்குநர் திரு.தட்சிணாமூர்த்தி இஆப., தோட்டக்கலைத்துறை இயக்குநர் திரு.சுப்பையன் இஆப., தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் திரு.ஆ.அண்ணாதுரை இஆப., தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.தேஷ்முக் சேகர் சஞ்சய் இகாப., உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்களின் உடலுக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர். பின்னர், பாபநாசம் வட்டம், ராஜகிரி வன்னியடி சாலையில் உள்ள மணல்மேட்டில் அவருக்கு சொந்தமான தோப்பில் கொரோனா விதிமுறைகளின்படியும், 21 போலீசார் 63 குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடனும் மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்களின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள் 2006-2011ஆம் ஆண்டுகளிலும், 2011-2016ஆம் ஆண்டுகளிலும் பாபநாசம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக பதவி வகித்துள்ளார். 2016ஆம் ஆண்டு பாபநாசம் தொகுதியில் மூன்றாவது முறையாக வெற்றிபெற்று, தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சராக பணியாற்றி வந்தார். மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்களுக்கு பானுமதி என்ற மனைவியும், 4 மகள்கள் மற்றும் 2 மகன்கள் உள்ளனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.